## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 227/2014 | Date : 02.08.2023 | DW1 |
|---|---|---|
| Name: காஞ்சனா | D/o. **குமரேசன்** | |
| Evidence Recorded Time: 12.51 P.M. to 01.20 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

துரைசாமிபிள்ளை என் தாத்தா என்றால் சரிதான். துரைசாமி பிள்ளைக்கு மூன்று மனைவிகள் என்பதையும், முதல் இரண்டு மனைவிகளுக்கு குழந்தைகள் இல்லை என்பதையும், மூன்றாவது மனைவிக்கு ஏழு பிள்ளைகள் பிறந்ததையும் நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கில் உள்ள இரண்டு தரப்பினர்களின் உறவு முறைகளை நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் துரைசாமி பிள்ளையின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல, அவர் கிரையம் வாங்கிய சொத்துக்கள் ஆகும். துரைசாமிபிள்ளை சொந்தமாக கிரையம் வாங்கிய சொத்து என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், வழக்கு சொத்துக்கள் அனைத்தும் துரைசாமிபிள்ளையின் பூர்வீக சொத்துக்கள் என்றாலும் சரியல்ல. 1ம் வாதி லட்சுமிக்கு என்ன வயதிருக்கும் என்றால் 90 வயதிற்கு மேல் இருக்கும். அதேபோல 4ம் வாதிக்கும் 90 வயதிருக்கும் என்றால் சரிதான். 11ம் வாதிக்கு என்ன வயதிருக்கும் என்றால் 79 வயதிருக்கும். 14ம் வாதிக்கு எவ்வளவு வயது என்றால் 67 வயதிருக்கும். 1ம் பிரதிவாதியான எனது தாயாருக்கு 69 வயதிருக்கும். வழக்கு சொத்துக்கள் குறித்து வாதிகள் மற்றும் எங்களுக்கும் இடையே எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் குறித்த பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பட்டாதான் வழக்கு சொத்து பட்டா என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான பட்டா வா.சா.ஆ.16 ஆகும். அசல் வழக்கு எண்.754/1987 என்ற வழக்கு சம்மந்தமாக பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பர்வதவர்த்தினி, பாக்கியம், என் தாயார் சம்பூரணம்,

விமலம்மாள், லட்சுமியம்மாள், 10ம் பிரதிவாதியின் தாயாரான இறந்துபோன ஜானகியம்மாள் ஆகியோருக்கு இந்த வழக்கு சொத்துக்களில் உரிமை மூலம் உள்ளது என்றுதான் மேற்படி அசல் வழக்கின் தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகளாக காட்டப்பட்டுள்ள ஜோதிலிங்கம், மற்றும் ராமநாதபிள்ளை ஆகியோர் இந்த வழக்கில் 6ம் பிரதிவாதியின் கணவரும், 8ம் பிரதிவாதியும் ஆவார்கள் என்றால் சரிதான், மேற்படி நபர்களுக்கு மேற்படி அசல் வழக்கில் உரிமை உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கின் தீர்ப்பை எதிர்த்து யாரும் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல, ஜானகியம்மாள், லட்சுமியம்மாள், ஜோதிலிங்கம், நடராஜன் ஆகியோர்கள் மேல்முறையீ செய்தார்கள். அந்த மேல்முறையீடு என்ன ஆனது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. தாவா சொத்துக்களை என் அப்பா குமரேசனக்கு குத்தகைக்கு விட்டதாக கூறியுள்ளேன் அவ்வாறு யார் குத்தைக்கு விட்டார்கள் என்றால் துரைசாமியின் வாரிசுகள் குத்தகைக்கு விட்டார்கள். என் தாயார் சம்பூரணமும் துரைசாமிபிள்ளையின் ஒரு வாரிசு என்றால் சரிதான். துரைசாமி எனக்கு தாத்தா ஆவார். துரைசாமியின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து தான் என் அப்பாவிற்கு குத்தகைக்கு விட்டார்கள் என்றால் சரிதான். குத்தை வாய்மொழியிலான குத்தைகையாக அல்லது எழுத்து பூர்வமான குத்தகையாக என்று சொல்லவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.111/2010 வழக்கின் தீர்ப்புரையை இந்த வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படல் அசல் வழக்கு எண்.111/2010–ன் தீர்ப்பின் மீது ஏற்பட்ட மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கில் சட்டப்படி என் அப்பாவை வெளியேற்றலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. என் தாத்தா எழுதி வைத்த வா.சா.ஆ.1 உயிலை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி உயிலில் துரைசாமிபிள்ளை என் குடும்ப சொத்து சம்மந்தமாக எனவும், குடும்ப சொத்து விரையமாகிவிடும் என்று கூறிதான் உயில் சாசனம் எழுதியுள்ளார் என்றால் சரிதான். உயிலில் அடியில் கண்ட சொத்துக்கள் எனக்கு பிதுர் ராஜ்யமாகவும், சுயார்ஜிதமாகவும் கிடைக்கப்பெற்றது என்று

கூறியுள்ளார் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் இந்த வழக்கு சொத்துக்கள் மட்டும் அல்லாமல் சில குதவை சொத்துக்களையும் குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.